# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குடியாத்தம், வேலூர் மாவட்டம்.

முன்னிலை : திரு.சி.செந்தில் குமார், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2017ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண் 65/2013**

பாபு ... வாதி

எதிராக

1.சுரேஷ்
2.லட்சுமி
3.கௌரி ... பிரதிவாதிகள்

WEB COPY

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக என் முன்பாக கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ரஜினி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு சார்வு செய்யயப்பட்ட நிலையில் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால் அவர்களை தோன்றா தரப்பினராக தீர்வு செய்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கானது தாவா சொத்துக்களில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, குடும்பத்தினர்களோ, முகவர்களோ மற்றும் வேலையாட்களோ யாரும் தாவா சொத்தில் வாதியின் சுவாதீன அனுபவத்திற்கு எவ்விதமான இடையூறுகளும் செய்ய கூடாதென்று நிரந்தர

தடையுறுத்து கட்டளை பரிகாரம் மற்றும் வழக்கு செலவு தொகை கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வாதியின் வழக்குரையின் சுருக்கம்:-</u>**

தாவா சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்தும் மற்றும் இதர சொத்துக்களும் அப்துல்லா மற்றும் 10 நபர்களுக்குள் 01.09.1963 தேதியில் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலம் 'ஜி' செட்யூல் சொத்தாக ஒரு மாதர் ஜெயின்பீ என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை மேற்படி மாதர் ஜெயின்பீ அவரது வாழ்நாள் வரை அனுபவித்து வந்து அவருடைய இறப்பிற்கு பின்னர் அவரது வாரிசுகள் தாவா சொத்தினை ஒரு முகம்மது தாஹிர் என்பவருக்கு 30.05.2006 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணத்தின் மூலம் கிரயம் கொடுக்கப்பட்டு மேற்படி கிரய தேதியிலிருந்து தாவா செட்யூல் சொத்தானது மேற்படி முகம்மது தாஹிரின் அனுபவத்தில் இருந்து வந்து மேற்படி முகம்மது தாஹிர் கடந்த 26.02.2016 தேதியில் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணத்தின் மூலம் வாதிக்கு கிரயம் கொடுத்த பின்னிட்டு தாவா சொத்தானது வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது. இந்நிலையில் கடந்த 25.11.2016ம் தேதி தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லாத பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து வாதியின் நிம்மதியான அனுபவத்திற்கு இடையூறு செய்ததை வாதி மிகுந்த சிரமங்களுக்கிடையே மேற்படி பிரதிவாதிகளின் செயலை தடுத்து நிறுத்தி விட்டார். மேற்படி பிரதிவாதிகளின் செயலானது சட்டத்திற்கு முரணானது. எனவே தாவா சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ மற்றும் வேலையாட்களோ யாரும் எவ்வித இடையூகளே செய்யக் கூடாதென்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத் தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

3.இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு சார்வு செய்யப்பட்ட நிலையில் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக தீர்வு செய்யப்பட்டுள்ளது.

4.இவ்வழக்கில் வழக்குரை சங்கதிகளை பரிசீலித்து பார்க்கையில், இந்நீதிமன்றம் தீர்வு காணவேண்டிய பிரச்சினையாக கருதுவது என்னவெனில், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:-</u>**

5.இவ்வழக்கில், வாதி தரப்பில் வாதி வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

WEB COPY

6.இவ்வழக்கில் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி அப்துல்லா மற்றும் 10 நபர்களுக்குள் 01.09.1963 தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் 'ஜி' செட்யூல் சொத்தாக ஒரு மாதர் ஜெயின்பீ என்பவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும், வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தின்படி மேற்படி மாதர் ஜெயின்பீ என்பவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தானது 30.05.2006ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின்படி முகம்மது தாஹிர் என்பவரின் பெயருக்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், வா.சா.ஆ.3 கிரய ஆவணத்தின்படி மேற்படி முகம்மது தாஹிர் என்பவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தானது 26.02.2016 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணத்தின்படி வாதியின் பெயருக்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி தாவா சொத்தினை பொறுத்து வாதியின் பெயரில் உள்ள கணினி சிட்டா என்பதும் தெரியவருகிறது. மேற்படி ஆவணங்களின்படி வாதிக்கு

பாத்தியப்பட்ட சொத்தில் பிரதிவாதிகள் வாதியின் நிம்மதியான சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்த காரணத்தினால் பிரதிவாதிகளுக்கு எதிராக வாதியால் இந்த வழக்கு தொடரப்பட்டு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அதனை பெற்றுக்கொண்டு பிரதிவாதிகள் வாதியின் வழக்குரையை மறுக்கும் வகையில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இவ்வழக்கின் சங்கதிகளை உறுதிப்படுத்தி வா.சா.1 சாட்சியாக வாதியானவர் சாட்சியமளித்துள்ளார். எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் வாதி தனது வழக்கை உரிய சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் மெய்ப்பித்துள்ளார். எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் வாதி கோரியுள்ளவாறு நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

WEB COPY

முடிவாக, வாதி தாவா சொத்து விவரத்தில் கண்ட சொத்தில் நிம்மதியான முறையில் சுவாதீன அனுபவத்தில் இருந்துகொண்டு அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது குடும்பத்தார்களோ, ஆட்களோ, முகவர்களோ, பணியாட்களோ யாரும் எவ்விதமான இடையூறுகளும் செய்ய கூடாதென பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் வழங்கி வாதியின் செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக கணினினில் தட்டச்சு செய்யப்பட்டு அது என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்ட பின் 2017ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் நாளான இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா.1 பாபு

**<u>வாதி தரப்பு சான்றாவாணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.09.1963 | பாகப்பிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 30.05.2006 | கிரய ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் |
| வா.சா.ஆ.3 | 26.02.2016 | கிரய ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் |
| வா.சா.ஆ.4 | ---- | கணினி சிட்டா |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :</u>** இல்லை.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.

WEB COPY